Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய ௵ மாசி ௴ ௧௨ (12-2-39) { இல. 17

## சர்வ கலாசாலைக் கல்லூரியில் மாணவர்களைக் குறைத்தல்

கொழும்பிலுள்ள சர்வ கலாசாலைக் கல்லூரியிற் கற்பதற்கு அநேகம் மாணவர்கள் வருடாவருடம் செல்லுகிறார்கள். இவ்வருடம் 400க்கு மேலதிகமான மாணவர்கள் சேர்வார்கள் என்று கருதப்படுகின்றது. எல்லாமாணவர்களையுங் கல்லூரியிற் சேர்த்தால் புதிய கட்டடங்களைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். கல்லூரியிற் சேர விரும்பும் பிள்ளைகளின் தொகையைக் குறைப்பது எவ்வாறு? அரசாங்கசபையில் கல்வி மந்திரி பிரேரித்த பிரேரணை, மாணவர் தொகையைக் குறைக்கும் நோக்கமுடையது. அப் பிரேரணையின்படி, சர்வ கலாசாலைக் கல்லூரியிற் கற்க விரும்பும் ஒவ்வொரு மாணவனும் சர்வ கலாசாலையாரால் நடாத்தப்படும் பிரவேசப்பரீக்ஷையிற் தேற வேண்டும். அன்றேல் 'மற்றிக்' வகுப்பிற்குப் பின்னர் ஒருவருஷம் கற்றதாக ஒரு தராதரப் பத்திரம் தலைமை யாசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இம்முறையை நாம் முன்னரே கண்டித்துள்ளோம். அரசாங்கசபை, மந்திரியின் பிரேரணையை ஏற்றுக்கொண்டுவிட்டது. உயர்தரக் கல்வி கற்கும் பாக்கியம் எல்லோருக்கும் உரியது. ஒரு சிலரை மாத்திரம் தெரிந்தெடுத்துக்கொண்டு மற்றையோரை உயர்தரக் கல்வியின் பயனை அடையவிடாமற்றடுப்பது நன்றன்று. சர்வ கலாசாலைகளில் மாணவர்கள் அதிகரிப்பது இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும் உள்ளதென்றும், அங்குள்ள சர்வகலாசாலைகள் கற்கவிரும்புவோரைத் தடுக்க முன்வரவில்லை யென்றும் திரு. பொன்னம்பலமவர்கள் வாதாடியது மெச்சத்தக்கது.

இவ்விஷயத்தில், திரு. மகாதேவா அவர்கள் கூறியது ஆராயத்தக்கது. அவரும் மாணவர் தொகையைக் குறைப்பது நன்றென்பதற்கு உதாரணமாக 'ஒக்ஸ்போட்டு', "கேம்பிறிட்ஜ்" சர்வ கலாசாலைகளிலும் பிள்ளைகள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள் என்று கூறினார். இங்கிலாந்தின் கல்வி நிலைக்கும் இலங்கையின் கல்வி நிலைக்கும் வித்தியாசம் அதிகம். இங்கிலாந்திலுள்ள சர்வ கலாசாலைகளில் தெரிந்தெடுக்கப்படாத பிள்ளைகள் சேரக்கூடிய கைத்தொழிற் கல்லூரிகள் இருக்கின்றன; கடற்படை ஆகாயப்படை நிலப்படைகளில் அங்கத்துவம் பெற்றுச் சீவியத்தைக் கழிக்கக்கூடிய வசதிகள் பல உண்டு; குடியேற்றநாடுகளுக்குச் சென்று அரசினருதவியோடு பல உத்தியோகங்களில் அமர வசதியுண்டு. நமது நாட்டில் கல்வி மூலமாகவே சீவியத்திற்கு வழிதேட வேண்டியதாக விருக்கின்றது; உயர்தரக் கல்வி கற்க இடம்பெறாவிடின் 'மற்றிக்' வகுப்பிற் சித்தியடைந்த மாணவர் என் செய்வது? திரு. மகாதேவா இவ்விஷயத்தை யோசித்திலர் போலும்.

திரு. நடேசன் முதலில் மேலதிகமாக வருகிற பிள்ளைகளுக்கு இடங்கோல முயன்றனர். மந்திரிசபை அம் முயற்சிக்கு இணங்காதது பற்றி அவரும் அவர்களோடுபோராடுவது உசிதமல்ல வென்றெண்ணிப்போலும் மாணவர் தொகையைக் குறைக்க முன்வந்தவர்களோடு ஒத்துழைத்தனர். கொழும்பில் பிரத்தியேகமாக ஒரு சர்வ கலாசாலை தாபிக்க முயலப்போகிறேன் என்று தெல்லிப்பழையில் கங்கணங்

(தொடர்ச்சி 133-ம் பக்கம் பார்க்க)

# எமது இலக்ஷியம்

"வ. இ."

சூரியன் உதிக்க எப்பொழுதும் தவறுவதில்லை. ஆகவே நமது வயசும் போய்க்கொண்டிருக்க ஒரு தடையும் ஏற்படாது. இன்றையிலும் நாளைய தினம் நம்முடைய வயசில் ஒரு பகுதி கழிந்துவிடுகிறது. சில காலத்தில் இன்னும் ஒரு பகுதி கழிகிறது. விஷமேறுவதுபோல் நமது வாழ்நாள் தேய்கிறது. இளைஞர்களாகிய எங்களுக்கு இது தெரிவதில்லை. "இப்போது நாங்கள் சிறுவர்தானே" என்று வாழாவிருக்கிறோம். இது பெருந் தவறு. நமது பிற்கால சீவியத்துக்குக்கு நாம் இப்பொழுதே சிறந்த அஸ்திவார மிட்டுக்கொள்ள வேண்டும்.

எம்முடைய லக்ஷியம் இப்பொழுது என்னவாக இருக்கிறதோ, அதுவே நமது பிற்கால வாழ்க்கையின் கட்டளைக்கல். நல்வாழ்வைத் தரினும், தீயவாழ்வைத் தரினும் அந்த லக்ஷியங்களே காரணம். நல்ல கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் பிற்காலத்தில் கடைத்தேறலாம். இன்றேல் வாழ்க்கையை நரகமாக்கி வருந்த வேண்டி வரும்.

"நம்முடைய வாழ்நாள் எவ்வளவோ இருக்கிறது. இப்பொழுது எவ்வாறு தலைகீழாக நடந்தாலும் பறவாயில்லை" என்று சில இளைஞர்கள் கருதி, கண்டபடி நடக்கிறார்கள். சிலர் "எல்லாம் ஒவ்வொரு காலத்தில் தான்; திருந்தி நடக்கவேண்டிய காலத்தில் தானாகவே திருந்துகிறது" என்று காலத்தின்மேற் சாட்டுச்சொல்லுகிறார்கள். இவையெல்லாம் பெருந் தவறுகள். இளமையில் வராத நல்ல பழக்க வழக்கங்கள் பின் எப்பொழுது வரப்போகின்றன. "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பொய்யாகுமா?

ஆகவே, சிறுவயதிலேயே சிறந்த லக்ஷியங்களை மேற்கொள்ளவேண்டும். கெட்டவர்களின் தோழமை, கெட்ட சிந்தனைகள் நமக்குத் 'தீயவன்' என்ற பட்டத்தைப் பெற்றுத்தருவன. அவற்றைக் கனவிலும் நினைக்கலாகாது. பெரியோர் கூட்டுறவும், அவர்கள் உபதேசமும் நமக்கு இன்றியமையாதன. பலர் தமக்குப் பெரியோரின் நட்பு சுலபமாகக் கிடைக்கக்கூடியதாயிருந்தும், அதைக் கவனிக்கின்றாரில்லை. "தூயோர் ஆயோர் பெருநட்பை அருந்தவத்தால் பெறல்வேண்டும்" என்று ஆன்றோர் கூறினர்.

நாம், நமது இருதயமாகிய வயலிலே, உயர்ந்த லக்ஷியங்கள் என்னும் தானியத்தை விதைத்து, அதில் முளைக்கும் பயிரைக் கெட்ட சிந்தனைகள் என்கிற மிருகங்கள் அழிக்காமல் பாதுகாத்து, வஞ்சனை, உலோபம், கோபம், பொறாமை முதலாகிய களைகளைப் பிடுங்கிப் பாதுகாத்தால் பின்னாளில் அப்பயிர் விளைந்து, பெரும் புகழ் ஆகிய நற்றானியத்தைத் தரும்.

பிறருக்குப் பிரதிபலன் கருதாது உதவி செய்யக் காத்திருக்கவேண்டும். மற்றவர்களை அன்பாகிய கயிற்றால் நம்மோடு பிணைத்துக்கொள்ள வேண்டும். வேலையற்றிருக்கும்போது, அறிவை விருத்தியாக்கும் வழிகளில் பயிலல்வேண்டும். நமது ஆத்ம லாபத்துக்குக் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. இயன்றவரை கடவுளை வழிபடல்வேண்டும். இன்னும் நாம் செய்தற்குரிய பல விஷயங்களுள. அவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். இவ்வகையான விஷயங்களில் நாம் இப்பொழுதே கவனம் கொள்ளுவமேல், நாம் பிறவியெடுத்ததின் பயனை அடைவோம் என்பதில் சந்தேகமில்லை.

# "பாட்டி"யின் பல்லு

எனக்கு ஒரு "பாட்டி" உண்டு. மூன்று காலிலேதான் நடப்பா. அவவின் பற்களெல்லாம் நான் அறியாத காலத்திலேயே விழுந்துவிட்டன. நான் ஒரு நாள் "பாட்டி"யைப் பார்த்து, "பாட்டி உங்கள் பல்லெல்லாம் எங்கே? விழுங்கிவிட்டீர்களா? அல்லது, பல்லில்லாமற்தான் பிறந்தீர்களா?" என்று கேட்டேன். அவ தன் பொக்குவாயாற் சிரித்துவிட்டு, "அட தம்பி நீயும் வளர்ந்துவிட்டாற் பல்லில்லாத "பாட்டன்"ஆய் விடுவாய்" என்றாள். "பாட்டி! வளராமலே என்றும் சிறுபிள்ளையாய் இருக்கமுடியாதா? எனக்குப் பாட்டனாய் வர விருப்பமில்லை" என்றேன். பாட்டிக்குக் குழந்தைப் பேச்சு வழ, வழ என்றிருந்தது.

பல்லில்லாத "பாட்டி"க்குப் பலகாரந் தின்ன முடியவில்லை. நான் முறுக்குத் தின்னும் போதெல்லாம் "பாட்டி"க்கு வாயிற் சலமூறும். பாவம்! நான் எனது பல்லுகள் விழமுன்னம் பலகாரமெல்லாந் தின்றாக வேண்டுமென்று இன்னொரு முறுக்கையெடுத்துக் கடிப்பேன். "பாட்டி" என்ன செய்வாள். பார்த்துப் பசிதீர வேண்டியதுதான்.

"பாட்டி", "பாட்டி"யானாலும் அவள் குணம் சில வேளைகளிற் குழந்தைகளின் குணத்தைப்போற் காணப்படும். அவவின பொக்கைவாய்ச் சிரிப்பு மெத்த வடிவாயிருக்கும். அவளிடம் வெற்றிலை, பாக்கு இடிக்கும் ஓர் உரலுண்டு. சில பலகாரங்களை, வெற்றிலை இடிப்பதுபோல் இடித்துச் சாப்பிடுவாள். நானும் இடித்துக் கொடுப்பேன்.

"தாத்தா" "பாட்டி"யின்மேல் அபார அன்பு வைத்திருந்தார். "பாட்டி"க்கு மேல்வாய்க்கும், கீழ்வாய்க்குமாகப் பல்லுக்கட்டுவித்துக் கொடுத்தார். அப்பல்லைப் பாட்டி தன் வாயிலணிந்ததும், பதினாறுவயதுக் குமரியாய்விட்டா. உள்விழுந்த சொக்கை எல்லாம் தடி கொடுத்து நிமிர்த்திவிட்டதுபோல் நிமிர்ந்துவிட்டன. "பாட்டி" பழையபடி பலகாரமுந் தின்னத்

*தன்னை அறியுந் தருணந் தனிற்றலைவர், என்னையணை யாதவண்ணம் எங்கொளித்தார் பைங்கிளியே.*

தொடங்கிவிட்டா. தேவையில்லாதபோதெல்லாம் "பாட்டி" தன் பல்லைக் கழற்றிவைப்பா.

விளக்கீடும் வந்தது. எங்குந் தீப அலங்காரம் செய்தோம். பாட்டியின் வெற்றிலை இடிக்கும் உரலடிக்கும் ஓர் கிழுவங்தடி நட்டோம். பலகாரங்களைப் படைத்துவிட்டு யாவரும் உண்ணப் புகுந்தோம். நானும் ஓர் பக்கத்தில் உட்கார்ந்தேன். என்னருகில் என் பூனையுமிருந்தது. நான் சாப்பிடும்போதெல்லாம் அப்பூனைக்கு உணவு கொடுப்பது வழக்கம். கொடாதுபோனால் அது தன் மூஞ்சியால் என் கையை இடிக்கும். இன்று பலகாரந் தின்னும் ருசியால், இடியையும் நான் கவனிக்கவில்லை. பூனைக்குப் பசியதிகம். பாட்டியின் பக்கத்திலிருந்த பெட்டியுட் பூனையின் கண் சென்றது. அதற்குளிருந்த பண்டங்களையெல்லாம் "பாட்டி" ருசி பார்க்க முன்னம் எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது. "பசி வந்தாற் பத்தும் பறந்துவிடுமல்லவா?"

பாட்டி அவுக்கென்று பெட்டியை எடுத்துப்பார்த்தா. (பலகாரமொன்றும் அங்கு காணப்படவில்லை.) சீ, நாயிலுங் கடைகெட்ட பூனையே என்று திட்டத் தொடங்கினா. "என் பூனையைப் பிறர் பேசுவது எனக்குப் பிடிக்காது." இருந்தும் "பாட்டி"யின்மேல் நான்மெத்த அன்பு. எனக்குப் "பாட்டி"க்குப் பலகாரமில்லையே என்பது பெரிய துக்கம். பூனைக்குப் பின்னால் நானுமோடினேன். பூனை வீட்டுக்குள் ஓடி மறைந்தது. அது சென்ற மூலையைப் பார்த்தேன். ஐயோ! என் இதயம் வெடித்து விடும்போலிருந்தது. ஓர் திருடன் அம்மூலையிற் பதுங்கி இருப்பதுபோல் எனக்குத் தென்பட்டது. அவன் கரியவனாகக் காணப்பட்டான். அவனது பல்லைப் பார்க்க எனக்குப் பயம் வந்தது. பயத்தினாற் சத்தம்போட முடியவில்லை. பின்னுக்கு இரண்டடி எடுத்து வைத்தேன். வைத்ததும், கள்ளன்! கள்ளன்!! ஓடிவாருங்கோ வென்று கூச்சலிட்டேன். அண்ணா ஒரு குண்டாந்தடியுடன் ஓடிவந்தார். கள்ளனின் தலையைப் பார்த்து அதற்கு ஓர் ஆமான அடி போட்டார். அவன் தலை சுக்கல் சுக்கலாகப் போயிற்று. (ஓரரவமுங் கேட்கவில்லை.) "பாட்டி" அப்போதுதான் விளக்குங் கையுமாக வீட்டுக்குள் வந்துகொண்டிருந்தா. வீடு வெளிச்சத்தால் நிறைந்தது. கள்வனின் உடலைக் காணவில்லை. பற்கள் சிதறுண்டு கிடந்தன. குறளி வித்தைக்காரக் கள்வனுக்குமென்று "பாட்டி" சொன்னா. அண்ணா மூக்கிற் கையை வைத்தார்; மூக்குச்சத்திரம் பார்ப்பதுபோல். நானே திகைப்பூட்டை மிதித்தவன்போற் திகைத்து நின்றேன். பாட்டி குனிந்து மூலையைப் பார்த்தா. ஐயோ! பாட்டியின் பற்கள் அங்கு சிதறுண்டு கிடந்தன. கள்வனில்லை; பூனையே "பாட்டி"யின் பல்லைத் தூக்கிக்கொண்டுவந்து பானையின்மேல் வைத்துவிட்டது.

பூனையின் திருவிளையாடலாற் பானையும் போய்ப், "பாட்டி"யின் பல்லும் தூளாய்விட்டது. பாட்டி கோபத்தால் நறுபப் பல்லில்லாது கஷ்டப்பட்டாள. இவையெல்லாவற்றையும் சுவருக்குமேற் பார்த்திருந்த பூனை "பாட்டி"க்குப் பயந்து என்னிடம் சரண்புகுந்தது. "கோவிலிற் பூனை குருக்களுக்கு அஞ்சமாட்டாதல்லவா?" பாட்டி தன் ஊன்றுகோலாற் பூனைக்கு அடிக்க ஓங்கினாள். நான் எனது பூனைக்கு அடிக்கவிடமாட்டேன். "பாட்டி அடியாதே! அடியாதே!!" என்று சத்தம்போட்டேன். பக்கத்து அறையிற் படுத்திருந்த எனது தகப்பனாரின் சத்தம் எனக்குக் கேட்டது. "பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். பொழுது கண்ணுக்குட் பிடித்தும் எழுந்திருக்க முடியவில்லையோடா! சோம்பேறி மாடே!" என்று சொல்லிக்கொண்டு சிங்களவனிடம் வாங்கிவைத்த பிரம்பால் என் முதுகிற் படார்! படார்!! என்று அடித்தார். நோவைத் தடவிக்கொண்டு, பாயைச் சுருட்டாமற் கிணற்றடிக்கு ஓடினேன். அங்கு "பாட்டி" வெந்நீருக்கு எரித்துக்கொண்டிருந்தாள். "பாட்டி"க்கு இக்கனவைச் சொன்னேன் விழுந்து, விழுந்து பொக்கை வாயாற் சிரித்தா.

ஐயா அடித்த அடியின் நோவினாலே பாதிக் கனவை மறந்துவிட்டேன். மிகுதி அறியவேண்டுமாயின் இன்னொருமுறை கனாக்கண்டு எழுதுவேன்.

சீ. அரசரத்தினம், (180)
உடுவில் கெந்தச் சைவவித்தியாசாலை.

# காகம்

[தேரூர், வித்துவான், S. உமைதாணுபிள்ளை]

1. நாட்டுக்கு நல்லவன்
நம்மோடு வாழ்பவன்
வீட்டுக்கு வேண்டியவன்
வேலைக்கு உதவுபவன்.

2. காலையில் எழுந்திடுவான்
'கா', 'கா' வென கரைந்திடுவான்
மாலையில் குளித்திடுவான்
மனையிலே சென்றிடுவான்.

3. அழுகிய பொருளையும்
அன்பாகத் தின்றிடுவான்
செழுமையாய் காற்றையும்
செவ்வையாய் வைத்திடுவான்.

4. உறவினரை உடனழைத்து
உணவுண்ண விரும்பிடுவான்
பறவையி லிதனைப்போல்
பாரிலொரு தொண்டனுண்டோ?

தாங்கரிய மையலெல்லாந் தந்தெனைவிட் டின்னருளாம், பாங்கியைச்சேர்ந் தார்இறைக்குப் பண்போசொல் பைங்கிளியே.

# நகைச்சுவைக் கதை

[பெயர்கள் எவரையுங் குறிப்பிடுவனவல்ல]

முருகையர் என்னுமொருவர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. அவர்களுக்கு முறையே, பாணிப்பிணாட்டன், முட்டைக்கண்ணன், வாச்சித்தலையன் என நாமங்கள் வழங்கலாயின.

முருகையர், ஒருநாள் அரிசிமூடை யொன்றெடுக்க வண்டிலுங் கட்டிக்கொண்டு, மூத்த பாணிப்பிணாட்டனையும் அழைத்துக்கொண்டு சென்றார். அரிசிமூடை எடுத்துக்கொண்டு வரும் வழியிற் பாணிப்பிணாட்டன், வண்டிலிருந்த அரிசிமூடையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற முருகையர் தம்பீ, ஏன் இந்த மூடையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறாய்? என வினவினார். அதற்குப் பாணிப்பிணாட்டன், இந்த மாடு எங்கள் இருவரையும் வைத்து இழுப்பதுமன்றி, இந்த அரிசிமூடையையும் வைத்திழுக்குமா? இழுக்கமாட்டாது. அதனாற்றான் நான் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றான். இதைச் செவியுற்ற முருகையர், இதுவும் எனக்குப் பொருத்த முதல்தான் எனத் தனக்குள் தன் விதியை நொந்துகொண்டு தன் வீடு சேர்ந்தார்.

அடுத்தநாள் இளைய முட்டைக்கண்ணன், மணிக்கூடொன்றை வைத்து அடித்துக்கொண்டிருந்தான். முருகையர், ஏண்டா மணிக்கூட்டை அடிக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு முட்டைக்கண்ணன், அடிக்குமேலடி அடித்தால் அம்மியும் நகரும் என்று உபாத்தியாயர் படிப்பித்தபடி அடிக்கிறேன்; இன்னும் சற்று நேரத்தில் மணிக்கூடு ஓடப்போகிறது; இனி நேரம் பார்ப்பதற்குச் சிரமப்படத்தேவையில்லை என்றான். இவனும் இப்படியோவென மனம் நொந்துகொண்டிருந்தார்.

மறுநாட் சாயந்தரம், ஆக இளையவனான வாச்சித்தலையனைக் காணாமையால் எங்குந் தேடியலைந்து, கடைசியில் வீட்டில்வந்து வாச்சித்தலையா! வாச்சித்தலையா!! எனக் கூவினார். உடனே வீட்டுக்குளிருந்து ஏனப்பா! நான் இங்கேயிருக்கிறேன் என ஒரு சத்தம் பிறந்தது. உடனே முருகையர் அங்கு சென்று பார்க்கையில், ஒரு மூலையில் கடகத்திற்குள் வாச்சித்தலையன் பிரசன்னமாயிருப்பதைக் கண்டார். உடனே அவர் ஏண்டா இந்தக் கடகத்திற்குள் இருக்கிறாயென்று முதுகில் அறையொன்று போட்டார். உடனே வாச்சித்தலையன், ஏனப்பா என்னை அடிக்கிறாய்? என்று அலறிக்கொண்டு எழும்பினான். உடனே முருகையர் கடகத்தைப் பார்க்கையில், பல முட்டைகள் உடைந்திருப்பதையும், அவனின் குண்டியெல்லாம் நனைந்து, உடைந்த முட்டையோடுகள் தொங்குவதையுங் கண்டார். உடனே அவர் பிரமித்து, ஏண்டா இப்படி யிருந்தாயென்று கேட்டார். அதற்கவன் இல்லையப்பா, கோழிகளெல்லாம் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது. அதுபோல நானும் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கலாம் என்று பார்த்தேன். நீயதற்கு விடுகின்றாயில்லை என்றான். உடனே முருகையர் அட கடவுளே! நீயும் இப்படி அவனும் அப்படி, இவனும் இப்படி. எல்லாரும் இப்படித்தான். நீங்கள் பட்டதுபாடு, கெட்டதுகேடு என்று புலம்பிக்கொண்டே அவ்வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். அன்றுமுதல் அவருக்குப் பைத்தியமும் பிடித்துக்கொண்டது.

வ. இரத்தினசபாபதி,
J. S. C. மாணவன்
கோண்டாவில் சைவவித்தியாசாலை.

# கழுதையும் புத்திரவாஞ்சையும்

[கே. வித்யாஸாகரன்]

அன்றைய தினம் கடுவூர் எலிமெண்டரி ஸ்கூலில் வழக்கத்திற்கு மாறாக நிசப்தம் குடிகொண்டிருந்தது. பையன்களெல்லோரும் நல்ல உடை தரித்து, சிறிதளவு சப்தம் கூடச் செய்யாமல் உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். இவற்றிற்கெல்லாம் காரணம் யாதெனில், அன்றைய தினம் இன்ஸ்பெக்டர் அங்கு விஜயம் செய்து, ஒவ்வொரு வகுப்பாகப் பார்வையிட்டுக்கொண்டே வந்தார்.

எல்லா வகுப்புகளையும் விட, முதலாவது வகுப்புப் பையன்கள் மிகவும் ஒழுங்காக இருந்தனர். அவர்களுக்கு உபாத்தியாயர் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் போதித்துக்கொண்டிருந்தார். பையன்களெல்லோரும் மிகவும் சிரத்தையுடன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

திடீரென்று இன்ஸ்பெக்டர் அவ்வகுப்பினுள் நுழைந்தார். உடனே பையன்களெல்லோரும் எழுந்து நின்றனர். இன்ஸ்பெக்டர் அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு உபாத்தியாயரை நோக்கி, "இப்பொழுது எதைப்பற்றிச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு உபாத்தியாயர், "ஜீவகாருண்யம்" என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர் ஒரு பையனை நோக்கி, தம்பீ! எங்க வீட்டுப் பையன் ஒரு கழுதைக் குட்டியை அடித்துக்கொண்டிருக்கிறான். அப்பொழுது நான் போய் அதை அடிக்கக் கூடாது என்று சொன்னால், நான் செய்த காரியத்தை என்னவென்று சொல்வது?" என்று கேட்டார்.

# மேழிச் செல்வத்தின் மாட்சி

மேதினி உதித்த மானிடரெவ்வொருவரும் மேனிலை அடைதற்கு மேழிச்செல்வமே மிகவும் உத்தமமானது. மற்றெவ்வித செல்வமும் மனிதர் மாட்டு மயக்கத்தைக் கொடுக்குமெனின் அது மிகையாகா.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்னுந் திருவாக்கு, மேழிச்செல்வத்தின் மேம்பாட்டை இனிது விளக்குகின்றது. மேழிச் செல்வமுடையானை நம்மவர் மிக வெறுப்பர். என்னே மதியீனம்! ஓதுவாரெல்லாம் உழுவார்தம் தலைக் கடைக்கன்றோ புகுதல் வேண்டும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்னுந் திருவள்ளுவரின் திருவாய் மலர்தல், உழுதுண்டு வாழ்வாரின் சிறப்பைத் தெள்ளிதில் விளக்குகின்றதன்றோ. கம்பர் உழவின் சிறப்பைப்பற்றி ஏரெழுபதில் கூறியது எங்ஙனம் எம் மனதில் விளங்கா தொழியும்!

உழுதுண்டு வாழ்பவனிலும் உயர்ந்த ஒருவன் உளனா? அவன் குற்றங்களைக் களைய மற்றவற்கு என்ன நியாயம் உளது? அவன் தனக்குத்தான் தலைவனும் அரசனும் அன்றோ? மற்றவர்கள் இவனை இரக்கவேண்டும். இவன் அடுத்தவரை வேண்டிநிற்கமாட்டான்.

கற்றவர்கள் உழுதுண்டு வாழ்தலைச் சிறந்த தொழிலெனப் படித்தறிந்தும், தெளிந்தும் பின்னும் அத்தொழிலைச் செய்ய முன்னிற்காதது வியப்பைக் கொடுக்கின்றது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள்)

என்றபடி நாம் கற்பவற்றைக் குற்றம் நீங்கக்கற்று அத்துடன் நில்லாது அதன்படி யொழுகுதலும் அத்தியாவசியம் அன்றோ!

இந்நானிலத்தில் நாகரீகம் நாளுக்கு நாள் முதிர்ச்சியடைந்து வருகின்றது. உழவுத்தொழிலும் சிறுபான்மையாக மேனிலைக்கு இவர்கின்றது. பாடசாலைத்தோட்டங்கள் உண்டாக்கி மாணவர் தோட்டவேலையிற் பங்கெடுக்கின்றனர்.

அன்ன விசாரம் ஒருவற்கு அதிக இன்னலை அளிக்கும். பசியின் கொடுமையை எவ்வாறு விளக்க முடியும். மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம் தவம், முயற்சி, தாளாண்மை முதலியன பசி வருங்கால் ஒருவனை விட்டகல, வாட்டம், சோம்பல், அவமானம், பொய், பேராசை, என்பன வந்தடையும். பசியின் கொடுமையால், ஓர்கால், விசுவாமித்திர முனிவரே நாயின் மாமிசத்தை உண்டு அவமதிப்பெய்தினராம். இக்கொடிய பசியைநீக்குவோன் உழவன் அன்றோ. உழவனை இல்லாத ஊர் எது? இராச்சியம் எது? அரசாங்கந்தான் எது?

"உழவன் மேட்டை உழுதாற்றான் அரசன் காட்டை ஆளலாம்" என்றபடி, உழவன் இன்றேல், அரசாங்கம் முயற்கொம்பே. மேழிச் செல்வமுடையானுக்கு மற்றைய தொழிலாளர் செல்வம் எம்மாத்திரம்!

அவன் செல்வமே செல்வம். அவன் தொழிலே தொழில். அவன் அன்பே அன்பு.

அச்சம் பெரிதாயும் அனுபவிக்கப்படுமின்ப மற்பமாயுமுள்ள மற்றைய தொழில்களெல்லாவற்றையும் விடுத்து உழவுத்தொழிலையே நாடுவோமாக. உலகம் உய்ய வழியைத் தேடுவோமாக. தொழுங்குலம் முதலாம் பெருங்குலத்தாரினும் சிறந்து விளங்கும் உழுங்குலத்தாராவோமாக. "ஏற்றவன் இரப்பாளி" என்னுந் திருவாக்கை உள்ளத்தமைத்து எல்லாரும் மேழிச் செல்வமுடையராய் விளங்குவாராக.

K. கனகசுந்தரம்,
கரவெட்டி கிழக்கு.

# சர்வகலாசாலைக் கல்லூரியில் மாணவர்களைக் குறைத்தல்

129-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டிய திரு. பிள்ளையவர்கள் கொழும்புச் சர்வகலாசாலை விருத்தியாகாதவாறு தடுக்கக் கங்கணங்கட்டி நிற்பது வேடிக்கையே! கொழும்பி லுள்ள சர்வ கலாசாலைக் கல்லூரி விரிவடைந்தாலன்றோ பிள்ளையவர்கள் கொழும்பிற் சர்வகலாசாலையைத் தாபிக்கப் பேருதவியாக விருக்கும் என்பதை எதற்காக மறந்தாரோ அறியேம்.

நாட்டில் வேலையில்லாக் கஷ்டம் அதிகப்படுகிற இக்காலத்தில், கல்வி கற்காமற் றடுத்தல் மேலும் மேலும் வேலையின் றியிருப்பவர் தொகையை அதிகரிக்கச் செய்வதாகுமல்லவா ?

அப் பையன் ஒன்றுந் தெரியாது விழிக்கவே, அவனுக்குப் பக்கத்தி லுட்கார்ந்திருந்த ராமு என்பவன் எழுந்து "புத்திரவாஞ்சை, ஸார்" என்றான். —"ஹநுமான்"

திருமாவளவன்

1939-ம் ஆண்டு கனிஷ்டபாடசாலைத் தராதரபத்திரவகுப்புக்கு இலக்கிய பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

விலை சதம் 50
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்

தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டங் கென்னையினிப் பாரோரு தாண்டானைப் பற்றுவனோ பைங்கிளியே.

# அன்றைய இரவு

இரவு ஏழு அல்லது எட்டு மணியிருக்கலாம். சந்திரன் தனது ஒளி பொருந்திய கிரணங்களைப் பரப்பி, உலகிற்கு இன்பமூட்டிக் கொண்டிருந்தான். தூரத்தில் விளங்கிய குடிசைகள் எல்லாம், ஒரே பால் வர்ணமாகத் தோன்றின. அந் நிலவொளியில்......... இங்ஙனம் யாவும் அழகாக விளங்குவதைக் கண்ட கார்மேகங்கள், பொறாமைகொண்டு சந்திரனை மறைத்துக்கொள்ளப் பிரயாசைப்படுபவைபோல் சந்திரனுக்கயலே கூட்டமாய்க் குழுமியிருந்தன. நட்சத்திரக் கூட்டங்கள் ஆகாயம் என்னும் நீலப் போர்வைக்கண் பதித்த வைடூரியக் கற்களைப்போல் ஜாஜ்வல்லியமாய் ஜொலித்தன.

அவ்வேளையில் யான் எங்கள் வீட்டு முற்றத்தில், செழித்து வளர்ந்திருந்த பசுமையான புற்களின்மீது எனது தோழி சௌந்தரியுடன் பொழுது போக்கிற்காக இயற்கை இன்பத்தைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன்.

சௌந்தரி என்னுடைய கலாசாலைச் சிநேகிதி. விடுமுறையைக் கழிப்பதற்காகக் கிராமத்திற்கு வந்திருந்தோம்.

முற்கூறியபடி வேடிக்கையாகக் கதைத்துக்கொண்டிருந்ததால் பொழுது போனதே தெரியவில்லை. மழையுந் தூற்றல்போட ஆரம்பித்தது. சந்திரன் 'எங்கே மழையில் நனைந்துவிடுவேனே' என்று பயந்து, தன்னைக் கார்மேகங்களால் நன்றாகப் போர்த்துக்கொண்டான். காரிருள் எங்கும் செறிந்தது. இடைக்கிடை பிரகாசக் கொடிபோல் தோன்றி மறைந்த மின்னல் அப்பயங்கர இருட்டைப் பாதித்தது.

சௌந்தரியும் நானும் உட் தாழ்வாரத்திற்குச் சென்று, அங்கேயிருந்த விசுப்பலகையில் உட்கார்ந்ததுதான் தாமதம், இரு குழந்தைகளின் குதலை மொழிகள் எங்கள் காதில் விழுந்தன. உற்றுக் கேட்டோம். திடீரென்று குழந்தைகள் சம்பாஷணையை நிறுத்திவிட்டன. 'டபக், டபக்' கென்ற இரு சப்தங்கள் எங்கள் வீட்டுக் கிணற்றிலிருந்து எழுந்தன.

நாம் திடுக்கிட்டுக் கையில் ஓர் விளக்குடன் அவ்விடத்திற்கு ஓடினோம். கிணற்றுள் வெளிச்சத்தைப் பிடித்துப் பிள்ளைகளைத் தேடினோம். என்ன மாயம்! அவற்றை அங்கு காணவில்லை.

இப்பொழுது மழை ஓய்ந்துவிட்டது. சந்திரனும் மெல்ல வெளிக்கிளம்பினான். குளிர்காற்றும் வீசத் தலைப்பட்டது. மரங்களிலிருந்து மழைத்தண்ணீர் சொட்டுச் சொட்டாய் விழுந்துகொண்டிருந்தது.

பிள்ளைகள் ஆழத்தில் தாழ்ந்துவிட்டன வென்று எண்ணித் திரும்புகையில், பக்கத்திலிருந்த பூச்செடிகளினூடே கமல வதனத்துடனும், முல்லைச் சிரிப்புடனும் இரு பூங்கொடிகள் போன்ற சிறுமியர் அசைவதைக் கண்டேன். அவர்களது சிரிப்புக்கோ அளவில்லை! விஷயம் என்னவென்றால், "வேடிக்கை பார்ப்பதற்காகக் கிணற்றுள் வெறுங்கல்லை விட்டெறிந்துவிட்டு, எங்களைத் திகைக்க வைத்துவிட்டார்கள்" என்பதே.

இதனைக் கேட்டதும், நாங்களும் சிரித்தோம் என்று கூறவும் வேண்டுமா?

கு. ராதாரத்தினம், VII-ம் வகுப்பு
ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி.

# இனி என்ன செய்வது? மன்னிப்புக் கேட்பது தான்!

**கா**லை 8 மணி இருக்கும். எனது தகப்பனார் ஆபீசுக்குப் போவதற்கு ஏதோ ஆயத்தஞ் செய்து கொண்டிருந்தனர். தாயார் சமயலறையில் இருந்தாள். நானும் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு ஆயத்தஞ் செய்தேன். என்னவோ எப்பொழுதும் சனியன் வந்தமாதிரி என் தம்பி, நான் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது வந்து புத்தகத்தை எடுத்து எறிவது வழக்கம். அன்றைக்கும் அப்படித்தான் வந்து எடுத்தான். நான் கோபித்து அடே போ அப்புறம் என்றேன். அவனுக்கு வந்துவிட்டது பிரமாத கோபம். எடுத்து எறிந்தான், புஸ்தகங்களை என் மூஞ்சிக்கு நேரே. நான்போய் இரண்டு அறை விட்டேன். அவன் சமயலறைக்கு நேரே கம்பி நீட்டினான். நானும் பின் தொடர்ந்தேன். அவன் நடந்ததை அம்மாவிடம் கூறினான். நான் தம்பிக்குக் கொடுத்த இரண்டு அறைகளும் அம்மாவால் எனக்குத் திருப்பித் தரப்பட்டது; ஓவென்று கதறினேன்.


இதற்கிடையில் தகப்பனார் ஓடிவந்து எங்களைச் சமாதானம் செய்தார். அம்மா பின்னும் எனக்கு அடித்தாள். நானும் என்னால் இயன்றவரையும் கத்தினேன். கடைசியில் அம்மா தன் கண்ணெதிரில் என்னை நிற்க வேண்டாமென்று விரட்டினாள். நானும் அவள் கட்டளைப்படி செய்தேன்.

அன்றைக்கு நான் பாடசாலைக்குச் செல்லவில்லை. உணவும் அருந்தவில்லை. துக்கம் நெஞ்சை அடைத்தது. பகல் 12 மணி இருக்கும். என் சிநேகிதி பொன்னம்மாள் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. நான் ஓடிச்சென்று கதவைத் திறந்தேன். அவள் வந்து நாற்காலியில் உட்கார்ந்து பள்ளிக்கூடத்திற்கு வராத காரணம் கேட்டாள். நான் விம்மலோடு நடந்ததைக் கூறினேன். அவள் என் மனத்துக்கு விரோதமாக என் தாய் சொற்படி நடக்க வேண்டுமென்றும், தாய் சொல்லைத் தட்டுதல் பெரும் பாவமென்றும், அப்படி நான் செய்தபடியால் என்னை வெறுக்கிறேனென்றும் கூறிவிட்டுச் சடக்கென்று கதவைப் பூட்டி விட்டுச் சென்றாள். நான் ஆழ்ந்த சிந்தனை செய்தேன் கடைசியாக என்னுடைய சக்தியால் எங்கள் வீட்டில் ஒன்றும் நடக்காது என்று தோன்றிற்று. இனி என்ன செய்வது? மன்னிப்புக் கேட்பதுதான்

போ. அன்னலட்சுமி
7-ம் வகுப்பு மாணவி.

# சிறுவர் போட்டி 2/39

[முடிவு தேதி 15-2-39]



## குறிப்புக்கள்

**இட வலம் :**

1. காலாள்
4. ஓர் உறவினன்
6. நெய்தல்நில மக்கள்
8. ஓர் புத்தாச்சிரமம் உருக்குலைந்திருக்கிறது
10. உள்ளங் கலங்கிவிட்டது
12. திக்கு
14. தீன்
15. கசப்பு

**மேல் கீழ் :**

1. கற்புடையாள்
2. செப்பு
3. பொட்டு
5. வறுமை
7. மூன்றாவது நட்சத்திரம் மறைந்திருக்கிறது.
9. தலைவன்
11. கொஞ்சம்
13. பயில்

போட்டி ஆசிரியரின் தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன்.

பெயர்.............................................. சந்தா எண் ............

விலாசம்..............................................

..............................................

## நிபந்தனைகள்

1. 'ஈழகேசரி' இளைஞர் சங்கத்தவர்கள் மாத்திரமே இப் போட்டியிற் கலந்துகொள்ளலாம். பிரவேசக் கட்டணம் எதுவுமில்லை.
2. விடைகள் அச்சுக் கூபன்களில் எழுதப்பட்டு, சிறுவர் போட்டி, 2/39, C/o ஈழகேசரி, சுன்னாகம் என்ற விலாசத்துக்கு 15-2-39 புதன்கிழமை மத்தியானத்துக்குமுன் சேர்க்கப்படவேண்டும்.
3. சரியான விடைகளில் முதலாவதாகத் தெரியப்படும் பெயருக்கு முதற்பரிசு ரூபா 3-ம், இரண்டாமவருக்கு ரூபா 1-ம் கொடுக்கப்படும்.
4. விடைகள் பரிசோதிப்பதும், பரிசுகள் அளிப்பதும் ஆசிரியர் பொறுப்பு. இதைப்பற்றி எவ்வித கடிதப்போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

—தாத்தா.

------------------------------ இங்கே கத்தரிக்க ------------------------------

இங்கே கத்தரிக்க

# ஈழகேசரி
# இளைஞர் சங்கம்

# முதலாண்டு மகாநாடு

## இளைஞர் பேச்சுப் போட்டி
## விண்ணப்பம்

அன்பார்ந்த தாத்தா,

எங்கள் சங்கத்தின் முதலாண்டு மகாநாட்டில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள என்னையும் ஒருவராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்

..............................................

(கையொப்பம்)

முழுப் பெயர்..............................................

பெற்றோர் பெயர்..............................................

வயது......................பிறந்த திகதி..............................

பாடசாலை..............................................

விலாசம்..............................................

..............................................

வகுப்பு..............................................

சந்தா எண்......................

பேசப்போகும் விஷயம்..............................................

திகதி......................

..............................................

தலைமை ஆசிரியர் கையொப்பம்

[இந்தப் பத்திரத்தை நிரப்பி, "தாத்தா", C/o 'ஈழகேசரி' சுன்னாகம் என்ற விலாசத்துக்கு 1-4-39-க்குப் பிந்தாது அனுப்பி வைக்கவேண்டும். உறையின்மேல் ஒரு பக்கத்தில் பேச்சுப்போட்டி என்று குறிப்பிடவும்.]

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள்!

என்ன ஒரே யடியாகத் தாத்தாவை இந்த வாரம் கடிதக் கட்டுக்குள் புதைத்து விட்டீர்களே! வயதுபோன காலத்தில்—கண்ணாடியும் முறிந்துபோன சமயத்தில்—எத்தனை கடிதங்களை யென்றுதான் நான் திரும்பத்திரும்பப் படிக்கக்கூடும். முதலாண்டு மகாநாடு என்று கேள்விப்பட்டவுடனேயே மளமளவென்று பேரன்மாரும் பேத்திமாரும் கூத்தாடத் தொடங்கிவிட்டார்கள்! ஒரு பேரன் தான் அன்றையத்தினம் காலை 6 மணிக்கே வந்துசேர்ந்துவிடப் போறானும்! அடாப்பா தம்பி! மத்தியானப் போசனம் மாத்திரம் தருவோமல்லாமல், காலையில் காப்பி பலகாரம் கிடைக்கமாட்டாது, தெரியுமா? ஒரு சின்னப் பேத்தி என்ன சொல்லுகிறாள் தெரியுமா? "தாத்தாவின் கைக்கு ஒரு மோதிரம் போடவேண்டுமென்று ரொம்ப நாட்களாக எனக்கு ஒரு ஆசையிருந்தது. இப்போது மகாநாட்டில் அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ளலாம்." இதைக் கேட்டவுடன் பாட்டி மிகவும் கோபங்கொண்டுவிட்டாள். அவள் கோபித்தால் என்ன நடக்குமென்று உங்களெல்லாருக்குந் தெரியுந்தானே! ஆனபடியால், தங்கைச்சி! உன்னுடைய மோதிரத்தைத் தயவு செய்து நீயே போட்டுக்கொள். அல்லது, உனது அண்ணாவுக்குக் கொடுத்துவிடு. அப்படியில்லையென்று பிடிவாதம் சாதித்தால் உனது சங்கர்தானிருக்கிறதே!

ஈழகேசரி இளைஞர் சங்கத்துக்கு ஒரு சித்திர முகப்பு எழுதித் தரும்படி கேட்டிருந்தேனல்லவா? சங்கத்தில் அவ்வளவு சித்திரகாரர் இருப்பதாய்த் தோன்றவில்லை. அல்லது எழுதியனுப்ப வெட்கப்படுகிறார்களோ என்று கூடத் தெரியவில்லை. ஒரு சிலர் மாத்திரமே எழுதியனுப்பினார்கள். அவைகளில் தாத்தாவுக்குப் பிடித்தவை யொன்றுமில்லையென்று விசனமாயிருக்கிறது.

சரி, இனி 'மகாநாடு' கூடுவதைப் பற்றி யோசியுங்கள். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பார்கள். தமிழ் மாணாக்கர்களாகிய நாங்களெல்லாரும் சேர்ந்து இந்த இலங்கையையே ஒருஆட்டு ஆட்டிவைத்துவிடவேண்டும்! எங்கே பார்க்கலாம், வெற்றி முரசை ஊதுங்கள்!

(பேச்சுப்போட்டி விண்ணப்பப் பத்திரம் வேறோரிடத்திலிருக்கிறது.)

—தாத்தா.

## தாத்தா பதில்

ந. கந்தசாமி (181): தம்பி! இந்த வயதுபோன காலத்தில் என்னை யாப்பு அணியில் மாட்டிச் சங்கடப்பட வைக்காதே! உமது பாட்டில் சில பிழைகளிருக்கின்றன. சீர்களைக் கவனிக்க வேண்டும். பெரியகதை வைத்திருக்கிறீரோ? அனுப்பினால் பார்த்துப் பிரசுரிக்கிறோம். நமது மகாநாட்டு வெளியீட்டுக்கு ஏதாவது எழுத ஆயத்தப்படுத்தவும்.

ச. வரதராசன் (196): பயப்படவேண்டாம். 30-6-40 வரையில் இடமிருக்கிறது. வயது உயர்த்தும் விஷயம் பின்னர்தான் ஆலோசிக்கப்படும். சென்றவாரம் நான் இந்தப் பக்கத்தில் எழுதியதை வாசித்தீரா?

த. சரவணை: உமது சந்தா எண் தெரிவிக்கவும்.

### புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

195. குமாரசுவாமி ராஜரத்தினம் 196. வே. தி. நடராசா
197. பொ. அன்னலட்சுமி 198. செ. கணேசலிங்கம்
199. மா. குகராசா

கீழே காட்டப்பட்ட இலக்கமுள்ள அங்கத்தவர்கள் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்திருக்கின்றனர்.

3; 125; 143; 154; 171.

மற்றைய பழைய அங்கத்தவர்களும் இச்சங்கத்தில் உற்சாகமெடுத்தக தங்கள் அங்கத்துவத்தைக் கூடிய கெதியில் புதுப்பிப்பார்கள் என தாத்தா மிகவும் அன்போடு எதிர் பார்க்கிறார்.

### விண்ணப்பப் பத்திரம்.

திகதி..............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணா; மலாயா 16 காசு. ]

பெயர்..............................................................................

பிறந்த திகதி..................மாதம்...................வருடம்.....................

விலாசம்..........................................................................

..........................................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ..........................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம்ஆ பிப்ரவரி மீ 12உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது